No:54:02 Price: Rs.19.90

Herald of Deliverance
விடுதலைத் தூதன்

"Speak evil of no man" - Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

FEBRUARY 2019

உன் சகோதரனோடு ஒப்புரவாகு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களுக்கு,

எனது இதயங்கனிந்த அன்பின் வாழ்த்துதல்கள்.

இயேசு கிறிஸ்துவின் வருகை மிகச் சமீபமாயிருப்பதால், பிசாசு தேவனுடைய பிள்ளைகளைப் பலவித நோய்களினாலும், வேதனைகளினாலும், நெருக்கங்களினாலும் துன்புறுத்திவருகிறான். "**தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தர்**" (சங். 35:27) தம்முடைய பிள்ளைகளைக் கைவிடார். எதிர்பாராவகையில் தமது பிள்ளைகளின் ஊழியத்தில் எதிர்பாரா வகையில் தேவன் எழுப்புதலைத் தந்து, நிச்சயமாக அவர்களை முன்னேற்றுவார். தடைகள் உடைக்கப்படும்; சுவிசேஷ ஊழியம் பெருகும்.

"**எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல**" (பிலி.3:1) என்றுள்ள பவுலடியாரின் கூற்றின்படியே, நானும் பல காரியங்களைத் திரும்பத் திரும்ப எழுதவேண்டியதாயுள்ளது. ஊழியர்களின் குடும்பங்களிலும், விசுவாசிகளின் குடும்பங்களிலும் பிசாசு பிரிவினைகளையும், விரிசல்களையும் உண்டாக்கிவருகின்றான். மத்தேயு 18:19 இன்படி, கணவனும் மனைவியும் இணைந்து ஒருமனதுடன் ஜெபிக்கும் போது, மலைகளைப்போன்ற தடைகளைத் தேவன் தகர்த்து நொறுக்குவார். "**நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்**" (யோசுவா 24:15) என்றுள்ள யோசுவாவின் வாக்கிற்கிணங்க, புருஷனும் மனைவியும் பிள்ளைகளும் ஒன்றுபட்டு வாழத் தீர்மானிப்பீர்களாக.

ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்ற தம்பதிகளின் பெயர்கள் புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தில் பல இடங்களில் காணப்படுவதை உற்று நோக்குவீர்களாக. அவர்களது ஊழியம் வெற்றி சிறந்து காணப்பட்டதற்குக் காரணம், அவர்களது ஒருமனப்பாடேயாகும். கணவனும் மனைவியும் ஒன்றாக இசைந்தும், இணைந்தும் ஊழியம் செய்வார்களேயானால், ஆத்துமாக்களை அளவில்லாமல் அறுவடை செய்வர்; தேவனுடைய இராஜ்ஜியமும் விரிவாகும். இதை வாசிக்கும் தம்பதியர்களே! அன்பிலும், ஜெபத்திலும், பிரயாசங்களிலும் ஒருமனப்படுங்கள். புதிதாக உங்களைத் தேவனுக்கு அர்ப்பணியுங்கள். தேவனை மகிமைப்படுத்துங்கள்.

இக்கடைசி நாட்களில் ஊழியர்களும் விசுவாசிகளும் ஒருவரிலொருவர் முழுமனதோடு அன்புகூருவதைக் காண்பது அரிதாயிருக்கிறது. ஒருவரையொருவர் முகத்துக்கு முகம் எதிர்நோக்கத் தயங்குகின்றனர். இது தேவன் விரும்பாத செயலாகும்.

அன்பானவர்களே! கனம்பண்ணுவதில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ளுங்கள். உங்களைவிட மற்றவர்களை மேன்மையாக எண்ணுங்கள். அன்போடு கைகொடுத்து, ஒருவரையொருவர் மதித்து வாழுங்கள். இதுவே, எனது உள்ளத்தின் பாரமும் ஜெபமுமாக இருக்கிறது.

கர்த்தர் உங்களுள்ளத்திலே ஆழ்ந்த ஒரு கிரியையைச் செய்யட்டும். வீடுகளிலும், சபைகளிலும், வட்டாரங்களிலும், பட்டணங்களிலும், தேசத்திலும் மாபெரும் எழுப்புதல் உண்டாகட்டும்.

தேவன்தாமே தமது மிகுந்த கிருபைகளை உங்களுக்கு நல்குவாராக.

அன்புள்ள

R. K. Sam[signature]

உன் சகோதரனோடு ஒப்புரவாகு

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

குடும்பப் பிரச்சினையினாலேயோ, தத்தம் பல்வேறுபட்ட கருத்துக்களினாலேயோ, கொடுக்கல் வாங்கலினாலேயோ, மனிதனுக்கு மனிதன், மனதில் பகையுணர்வோடு வாழுவது இயல்பு. தேவனுடைய கிருபையைப் பெற்றுக் கொள்ளாமல் இத்தகைய மனிதர்கள் ஒருவரோ டொருவர் ஒப்புரவாகி சமாதானத்துடன் வாழ்வது அரிது. *"இடறல்கள் வராமல் போவது கூடாதகாரியம்"* (லூக்கா 17:1) என்றார் இயேசு. எனினும், அவரவர் தத்தம் சகோதர, சகோதரிகளோடே ஒப்புரவாகி வாழ்பவர் மட்டுமே தேவசித்தத்தின்படி வாழ்கிறவர்கள் என்றார் இயேசு.

"ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" (மத்தேயு 5:23,24).

மேற்கூறப்பட்ட வசனங்கள் இரண்டும் வேதாகம புருஷனான யாக்கோபின் வாழ்க்கை சரித்திரத்தில், ஒப்புரவாகும் படிகளாக அமைந் துள்ளன. யாவரோடும் சமாதானமாய் வாழ்வதற்கு ஒரு மனிதனுக்கு இரு அம்சங்கள் தேவை. முதலாவது, தனது சகோதரனிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும். அடுத்து, அவனது குறைபாடுகளை மன்னிக்கவும் வேண்டும். இவ்விரு அம்சங்களும் ஒரு மனிதனில் காணப்பட்டாலன்றி அவன் யாவரோடும் சமாதானத்துடன் ஒப்புரவோடு வாழமுடியாது.

"தான் அவர்களுக்கு முன்னாக நடந்துபோய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள்" (ஆதி.33:3,4).

யாக்கோபின் தமையனான ஏசாவிற்கு, தனது தம்பிமீது மனவருத்தம் உண்டாயிருந்தது. யாக்கோபு தனது அண்ணனான ஏசாவோடு எவ்வாறு ஒப்புரவானான் என்பதை ஆதியாகம் 32, 33 அதிகாரங்களில் காணலாம். இவ்விரு அதிகாரங்களும் ஒப்புரவாகுதலின் தன்மைகளைப் படிப்படியாக சித்திரிக்கின்றன. யாக்கோபின் அடிச்சுவட்டை நாமும் கடைப்பிடித்தால், நமது சகோதரர்களோடு எவ்வித இடறலுமின்றி ஒப்புரவாகமுடியும். இப்பாடத்தை யாக்கோபின் வாழ்க்கை நமக்கு நன்குக் கற்றுத்தருகின்றது.

உள்ளத்தில் உணர்வோடு ஒப்புரவாகுங்கள்

"பின்பு, யாக்கோபு ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிற தன் சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போகும்படி ஆட்களை அழைப்பித்து" (ஆதி.32:3):

'ஏசாவினிடத்துக்குப் போகும்படி' என்றுள்ள சொற்கள் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. இதிலிருந்து நாம் அறிவது என்ன? தன் சகோதரனோடு ஒப்புரவாகவேண்டும் என்றுள்ள ஓர் உணர்வு யாக்கோபை ஆழமாக உந்தித் தள்ளியது.

அன்பானவர்களே! "நான் என் சகோதரனோடு, சகோதரியோடு ஒப்புரவாக வேண்டும்" என்றுள்ள உணர்வு உங்களது

உள்ளத்தில் ஏற்படாவிடின், மற்றவர்களோடு ஒப்புரவோடு வாழ்வது என்பது சாத்தியமற்றதே. கர்த்தரின் கட்டளையினிமித்தமும் மற்றவர்களின் கட்டாயத்தினிமித்தமும் நீங்கள் ஒப்புரவாகமுடியாது; அவ்வாறு ஒப்புரவாகுதலும் சரியன்று. உங்களது உள்ளத்தில், "நான் அவனோடு, அவளோடு ஒப்புரவாகவேண்டும்" என்றுள்ள உணர்வு ஏற்படுதல் மிகமிக அவசியம்.

தான் லாபானோடு தங்கியிருந்த நாட்களில் தனக்குப் போதுமான எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் கிட்டிற்று என்றும், இப்போது தனக்கு அவனுடைய கண்களில் தயவு கிடைக்கவேண்டும் என்று அறிவிக்கும்படி தனது ஆட்களை முன் அனுப்பினதாக, ஏசாவிடம் கூறும்படி சொன்னான் யாக்கோபு (ஆதி.32:4,5).

தனது வாழ்வில் ஏற்பட்ட முந்தின தவறுகளை அப்போது சிந்தித்தான் யாக்கோபு. அண்ணனைப்போல தான் நடித்து, தகப்பனை ஏமாற்றி, அண்ணனுக்குரிய ஆசீர்வாதத்தைத் திருட்டளவாய்த் தன் தகப்பனிடமிருந்து பெற்றுக்கொண்டதை எண்ணி வருந்தி, அந்தத் தவறை எவ்வாறாயினும் சரி செய்துகொள்ள வேண்டுமென்று ஏவப்பட்டான் யாக்கோபு.

யாக்கோபின் உள்ளத்தில் ஒரு குற்ற உணர்வு இருந்துகொண்டேயிருந்தது. எவ்வாறாகிலும் தான் தன் சகோதரனோடு ஒப்புரவாகவேண்டும் என்றுள்ள ஆழ்ந்த உணர்வும், விருப்பமும் அவனுக்குள் தொடர்ந்தேர்ச்சையாகக் காணப்பட்டது. தன் சகோதரனுக்குத் தன்னோடேயிருந்த பகையுணர்வு மாறுவதற்கு, தான் எவ்வாறாயினும் முயற்சி எடுக்கவேண்டும் என்று தீர்மானித்தான்.

இப்படியே தான் ஓர் ஏமாற்றுக்காரனாய் வாழ்ந்துவிடலாம் என்ற தீய எண்ணமோ, பிடிவாதமோ அவனுக்குள் காணப்படவில்லை. அதனால்தான், தன்னிடமிருந்த சில ஆட்களைத் தனக்கு முன்பாகச் செல்லும்படி தன் அண்ணனிடம் அனுப்பினான்.

அன்பானவர்களே! நீங்கள் உங்களது சகோதர, சகோதரிகளோடே ஒப்புரவாக, முதலாவதாக உங்களுக்குள் தேவைப்படுவது உங்களுள்ளத்தில் ஓர் உணர்வும், விருப்பமும் ஆகும்.

எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலைகளை மேற்கொண்டு ஒப்புரவாகுங்கள்

"அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப் பிரித்து" (ஆதி.32:7):

இங்கு, யாக்கோபின் வியாகுலத்தையும், அதற்கு அவன் எடுத்த முயற்சியையும் குறித்துக் காண்கிறோம். தன் தமையனோடு ஒப்புரவாகவேண்டும் என்ற விருப்பமும், உணர்வும் யாக்கோபின் உள்ளத்திலே ஏற்பட்டாலும், அந்தப்பாதையிலே அவன் எதிர்கொள்ளவேண்டிய சில எதிர்மாறான சூழ்நிலைகள் காணப்பட்டன.

யாக்கோபு கூறின வாய்மொழிகளை, ஏசாவிடம் தான் அனுப்பின தனது ஆட்கள் சரியான முறையில்தான் கூறியிருப்பர். அப்போது ஏசா, நானூறு பேர்களோடு தன் தம்பியை எதிர்கொள்ள வருவதாக அவர்களிடம் கூறி அனுப்பினான். நானூறு பேர்களோடு தனது அண்ணன் வருவதைக் கேட்ட யாக்கோபு மிகவும் பயந்தான்; வியாகுலமுமடைந்தான்; செய்வதறியாது திகைத்தான்.

தன்னுடைய சகோதரனான ஏசா தன்னை மன்னிக்க வருகிறாரா? அன்றி, தன்னோடு போரிட வருகிறாரா? என்றெண்ணி, திகைத்தான். தன் தகப்பனார் மரித்து, அவரது துக்க நாட்கள் முடிந்த பிறகு, "நான் என்னை ஏமாற்றிய எனது தம்பியைக் கொன்று போடுவேன்" என்று ஏசா சொல்லிய வார்த்தைகளைத் தன் தாயின் வாயிலாக அறிந்ததை, அப்போது அவன் நினைவுகூர்ந்தான்.

தனது அண்ணன் தன்னைச் சந்திக்க விரைந்து வந்துகொண்டிருக்கிறான் என்ற சொற்களைக் கேட்ட யாக்கோபு, தான் எதிர்கொள்ளவேண்டிய சவாலை சந்திக்க முற்பட்டான். தனது மந்தைகளையும் மக்களையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து, தன் அண்ணனைச் சந்திக்கப் புறப்பட்டான்.

அன்பானவர்களே! யாக்கோபு எதிர் கொண்ட கடினமான சூழ்நிலைகளைப் போல, மற்றவர்களோடு ஒப்புரவாகவேண்டும் என்று எண்ணும் உங்களுக்கும் ஏற்படலாம். குடும்ப அங்கத்தினர் மத்தியிலும், விசுவாசிகளின் மத்தியிலும் ஏற்படும் விரிசல்களை நீக்க எண்ணும் நீங்களும் பல எதிரான சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடும்.

“இந்தக் கடினமான சூழ்நிலைகளை மேற்கொண்டு, நாம் ஒப்புரவாக வேண்டுமோ?” என்றெண்ணி, அவ்வுணர்வை, விருப்பத்தைத் தள்ளிவிடாதிருங்கள். யாக்கோபு தனது எதிர்மாறான சூழ்நிலைகளை எவ்வாறு மேற்கொண்டானோ, அவ்வாறே நீங்களும் எதிர்ப்புகளை மேற்கொள்ளுங்கள். ஒப்புரவாகும் திட்டத்தைக் கைவிடாது நிறைவேற்றுங்கள். எவ்வாறாயினும் உங்களது சகோதரரோடு ஒப்புரவாகுங்கள்.

வாக்குத்தத்ததைப் பற்றிப்பிடித்து ஜெபித்து, ஒப்புரவாகுங்கள்

ஆதியாகமம் 32:9-12 வாசிக்கவும்.

“... உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே” (ஆதி.32:9) என்றுள்ள தேவனுடைய வாக்கைப் பற்றிக்கொண்டு யாக்கோபு ஜெபித்ததை இங்குக் காண்கிறோம். அவன் தேவனுக்கு ஒரு நற்பெயரைச் சூட்டி அங்கு ஜெபித்ததை தமிழ் வேதாகமம் சிறப்புறக் கூறுகிறது. என்ன பெயர் அது? *“...என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே”* (ஆதி.32:9): என்பதாகும்.

அதுமட்டுமன்றி, *“... இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப் போ”* (ஆதியாகமம் 31:13) என்று சொன்னீரே! என்றும், *“நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே!”* (ஆதி.32:12) என்றும், தேவன் தனக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு, அவற்றை அவருக்கே நினைவு படுத்தி ஜெபித்தான் யாக்கோபு.

“அடியேனுக்குத் தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரனல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்து போனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்” (ஆதி.32:10) என்று யாக்கோபு தன்னைத் தாழ்த்தி ஜெபித்தது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தேவனது வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டு, தன்னைத் தாழ்த்தினதால், *“என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்,”* (ஆதி.32:11) என்று தைரியங் கொண்டும் தேவனிடம் ஜெபித்தான்.

அன்பானவர்களே! ஒப்புரவாகவேண்டும் என்றுள்ள உங்களது மனப்பான்மைக்கு எதிராக எல்லாச் சூழ்நிலைகளும் காணப்படினும், தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிப் பிடித்து, ஜெபித்து, ஜெயித்து, உங்கள் சகோதரரோடே, சக விசுவாசிகளோடே, குடும்ப அங்கத்தினரோடே ஒப்புரவாகுங்கள்.

அன்பின் மனப்பான்மையோடே ஒப்புரவாகுங்கள்

“இதோ, உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்கள் என்று கட்டளை யிட்டான்; முன்னே வெகுமதியை அனுப்பி, அவனைச் சாந்தப்படுத்திக்கொண்டு, பின்பு

அவன் முகத்தைப் பார்ப்பேன். அப்பொழுது ஒருவேளை என்பேரில் தயவாயிருப்பான் என்றான்" (ஆதி.32:20).

தன் சகோதரனோடு ஒப்புரவாக, யாக்கோபு கையாண்ட முறைகளை இங்குக் காண்கிறோம். முன்னே வெகுமதி, அவனைச் சாந்தப்படுத்துதல், பின்பு அண்ணனது முகத்தைப் பார்த்தல் என்ற படிகளைக் கையாண்டான் யாக்கோபு. *"அப்பொழுது ஒருவேளை என்பேரில் தயவாயிருப்பான்"* என்றுள்ள சொற்களை யாக்கோபு யாரிடம் சொல்லியிருப்பான்? முதலில் தனக்குள்ளேயும், பின்பு தனது வேலைக்காரரிடமும் சொல்லியிருப்பான். இது யாக்கோபின் அன்பின் மனப்பான்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

தனது அண்ணன் நானூறுபேரோடே தன்னை எதிர்கொள்ள வருகிறான் என்று கேள்விப்பட்ட யாக்கோபு, "எனது பட்சத்தில், நான் அறுநூறு பேரைத் தெரிந்தெடுக்கட்டும், நான் எனது பலத்தை அவனுக்கு நிரூபித்துக் காட்டட்டும்" என்று சொல்லவில்லை. மாறாக "வெகுமதிகளை அனுப்பி, அண்ணனைச் சாந்தப்படுத்துவேன்" என்றான்.

யாக்கோபு அன்புள்ளம் கொண்டவனானதால் தனது அண்ணனுக்குரிய பரிசுகளை மூன்று அணிகளாகப் பிரித்து அனுப்பினான். தனது மந்தையில் கிடைத்த தனது செல்வத்தில் எத்துணைச் சிறந்த வெகுமதிகளை அனுப்ப முடியுமோ, அத்தனை வெகுமதிகளையும் மூன்று அணிகளாகப் பிரித்து அனுப்பி, *"இதோ உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்."* ஒப்புரவாகுவதற்கு யாக்கோபு கையாண்ட அன்பின்முறை வெகுவாகப் பாராட்டத்தக்கது.

அன்பானவர்களே! நீங்கள் ஒப்புரவாக வேண்டிய உங்களது சகோதர, சகோதரிகளிடம் யாக்கோபு கையாண்ட அன்பின் வழிமுறையைக் கையாளுங்கள். ஒப்புரவாக விரும்புகிறவர்களைச் சந்திக்க, பரிசுப் பொருட்களோடு செல்லுங்கள். ஆடு, மாடுகளைக் கொண்டு செல்லமுடியாது. எனினும், ஒரு குலை அல்லது ஒரு சீப்பு வாழைப்பழம், அல்லது உங்களது தகுதிக்கேற்ப இனிப்புகள் இவற்றை வாங்கி, அவர்களைச் சந்தியுங்கள். அப்போது அவர்கள் சாந்தமடைந்து, உங்களோடு ஒப்புரவாக முயலுவர்.

இவ்வாறு அன்பு மனப்பான்மையுடன் நீங்கள் ஒப்புரவாகவேண்டும் என விரும்பினும், சிலர் அதை ஏற்க மறுத்து, எதிரும் புதிருமாகப் பார்க்கும்போது, தங்கள் முகங்களைத் திருப்பிக் கொள்வதும் இயல்பு. அதைக்குறித்துக் கவலைப் படவேண்டாம். உங்களது அன்புள்ளத்தை ஆண்டவர் அறிந்து, ஏற்ற பலனைத் தந்தருள்வார். **யாக்கோபைப்போன்று உங்கள் சகோதரரோடு அன்புள்ளம்கொண்டு ஒப்புரவாகுங்கள்.**

தேவனோடு தனித்திருந்து ஜெபித்து ஒப்புரவாகுங்கள்

"யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்" (ஆதி.32:24);

ஒப்புரவாகுதலுக்கு முன்னர் எடுக்க வேண்டிய படிகளைக் குறித்து, ஒன்றன்பின் ஒன்றாக இங்குக் கவனித்து வருகிறோம். ஆதியாகமம் 33 ஆம் அதிகாரம் 4 வசனத்தில், யாக்கோபும் ஏசாவும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி, அழுது, ஒப்புரவாகுதலைக் காண்கிறோம். ஒப்புரவாகுதலுக்கு முன்னர், யாக்கோபு நிறைவேற்றின காரியங்கள் அனைத்தும் ஆதியாகமம் 32 ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன.

யாக்கோபு தேவனிடத்திலிருந்து ஓர் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ள எண்ணி மட்டும், தேவனோடு போராடவில்லை. தன் அண்ணனோடு ஒப்புரவாகவேண்டும் என்றுள்ள உயர்ந்த நோக்கத்தோடுதான் தேவனோடு

தனித்திருந்து, போராடி ஜெபித்தான், தனது சத்துருவைப்போலக் காணப்பட்ட தனது அண்ணனைக்குறித்த பயம் அவனை ஆட்கொண்டது. அதனால்தான் அவன் தேவனோடு தனித்திருந்து, ஐக்கியங் கொள்ள விரும்பினான்.

அவன் தனது மனைவிமார்களிடத்தில் இவ்விதமாய்க் கூறியிருக்கலாம்: "நான் என் சகோதரனால் ஒருவேளை கொல்லப்படலாம்; எனக்கு என்ன நடக்கும் என்று என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. நான் கொல்லப்படுவதினால் நீங்கள் அனைவரும் அநாதைகளாக மாற நேரிடலாம். எல்லாவற்றையும் மேற்கொள்ள, இயற்கைக்கு மேற்பட்டதோர் பெலன் இப்போது எனக்குத் தேவைப்படுகிறது. தேவன் என்னைத் தொடவேண்டும்; என்னை மாற்றவேண்டும்; என்னை ஆசீர்வதிக்க வேண்டும்; எனக்கு எதிராகக் காணப்படும் அத்தனைச் சவால்களையும் நான் சந்திக்க ஆயத்தமாகவேண்டும். அதனால், நான் தேவனோடு தனித்திருக்கப்போகிறேன்; நீங்கள் இப்போது அக்கரைக்குச் செல்லுங்கள்" என்று கூறியிருப்பான்.

அன்பானவர்களே! உள்ளான மனிதனிலே புதிய பெலன் பெற, தேவனோடு தனித்திருந்து ஜெபிக்கவேண்டும். அன்று, யாக்கோபுக்கு அது முழு இரவு ஜெபமாயிருந்தது. இன்றும் புருஷன்மார்களும், மனைவிமார்களும் தங்களது குடும்ப ஒருமைப்பாட்டிற்கும், சபை ஒருமைப்பாட்டிற்கும், தேவனோடு தனித்திருந்து ஜெபிப்பது அவசியம்.

யாக்கோபு தேவனோடு தனித்திருந்து போராடி ஜெபித்தபோது, தேவன் அவனைத் தொட்டார். புது மனிதனாய் அவனை மாற்றினார். அவன் பெயர் மாற்றப்பட்டது; யாக்கோபின் ஆள் தத்துவத்திலே ஒரு மறுரூபம் ஏற்பட்டது. அண்ணனது முகத்தைக் காணுமுன் தேவனுடைய திருமுகத்தைத் தரிசித்தான். இதுவே இத்தனித்திருத்தலின் முக்கிய இரகசியமாகும். தனித்திருத்தலின் அநுபவத்திற்கு யாக்கோபு நமக்கோர் எடுத்துக்காட்டும், முன்மாதிரியும் ஆவார்.

அன்பானவர்களே! நீங்களும் உங்களுடைய சகோதர, சகோதரிகளோடே ஒப்புரவாகுமுன்னர், இயேசுவோடு தனித்திருந்து தேவனுடைய முகத்தைக் காணுங்கள். பின்னர் ஒப்புரவாகுங்கள்.

தருணத்தைப் பயன்படுத்தி, ஒப்புரவாகுங்கள்

"யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடேகூட நானூறு மனிதரும் வருகிறதைக் கண்டு, பிள்ளைகளை லேயாளிடத்திலும் ராகேலிடத் திலும் இரண்டு பணிவிடைக்காரிகளிடத்திலும் வெவ்வேறாகப் பிரித்துவைத்து" (ஆதி.33:1),

32 ஆம் அதிகாரத்தின் சம்பவங்கள் அனைத்தும் 33 ஆம் அதிகாரத்தின் சம்பவங்களோடு இணைக்கப்பட்டிருப்பது இங்கு நன்குத் தெளிவாகின்றது. தன் சகோதரனோடு ஒப்புரவாகவேண்டும் என்ற யாக்கோபின் விருப்பத்திற்கு, கர்த்தர் ஏற்ற தருணத்தை இங்குத் தந்ததைக் காணமுடிகிறது. குறிப்பிட்ட ஒரு நபரோடு நீங்கள் ஒப்புரவாகவேண்டும் என்று எண்ணுகையில், அந்த நபர் தூரத்திலிருக்கலாம். எனினும், தேவன் அவர்களோடு ஒப்புரவாக ஒரு தருணத்தை நிச்சயம் உங்களுக்குத் தருவார். அத்தருணத்தை நீங்கள் இழந்துவிடக்கூடாது.

"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபிரெயர் 12:14).

இவ்வசனத்தின்வாயிலாக நாம் அறிவது என்ன? யாவரோடும் நாம் சமாதானமாய் வாழ்ந்தால்தான் தேவனோடு பரிசுத்தத்தில் நெருங்கமுடியும், அவரைத் தரிசிக்கவும் முடியும். *'நாடுங்கள்'* என்ற தமிழ் வேதாகமச்

சொல் சிறப்பாக அமைந்துள்ளது. மற்றவர்களோடு சமாதானமாய், ஒப்புரவானவர்களாய் வாழவேண்டும் என்றுள்ள நாட்டமும், தேட்டமும் நமக்கு மிகமிக அவசியம்.

யாவரோடும் நீங்கள் சமாதானமாய் இருக்கமுடியாவிடின், மத்திய ஆகாயத்தில் இயேசு வரும்போது, நீங்கள் பறந்துபோக முடியாது. "நான் பறந்து இயேசுவோடு செல்வேன்" என்று கைதட்டி, ஆர்ப்பரித்து மகிழலாம். ஆனாலும் இயேசு கிறிஸ்து, "நீ பறந்து, என்னிடம் வரமுடியாது" என்பார். யாவரோடும் நல்மனச்சாட்சியோடுகூடிய சமாதானமாய் வாழ, பிரயாசப்படுங்கள்.

ஒப்புரவாகுவதற்குத் தேவன் தரும் தருணங்களை நழுவவிடாதிருங்கள். யாக்கோபு தன் அண்ணனைக் கண்டவுடன் அவனிடம் ஓடினான். அவனது முன்மாதிரியை, அடிச்சுவட்டைப் பின்பற்றி, தேவன் தரும் ஒப்புரவாகுதலின் தருணங்களைப் பயன்படுத்துங்கள்.

உங்களைத் தாழ்த்தி, ஒப்புரவாகுங்கள்

"தான் அவர்களுக்கு முன்னாக நடந்துபோய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள்" (ஆதி.33:3,4).

இதுவே ஒப்புரவாகுதலின் கடைசிப் படி. யாக்கோபு ஏசாவை நோக்கி முன்னாக நடந்துபோய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கினது, அவனது தாழ்மையைச் சுட்டிக்காட்டுகின்றது.

யாக்கோபு ஏசாவின் கிட்டச் சேரும் வரை, ஏழுவிசை குனிந்து வணங்கியிருப்பான். இதனைக் கண்ட ஏசா அதிர்ச்சியுற்று, ஓடிவந்து அவனைத் தழுவிக் கொண்டான்.

ஏசா, தன் தம்பியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான்; அவனை முத்தஞ் செய்தான். இருவரும் அழுதார்கள். ஒப்புரவாகுதலின் மேன்மையான இவ்வனுபவத்தை என்னென்று வர்ணிப்பது!

அன்பானவர்களே! சகோதரனோடே ஒப்புரவாக, யாக்கோபைப்போல நீங்கள் உங்களைத் தாழ்த்த முடியுமா? "அவ்வாறெல்லாம் என்னால் செய்யமுடியாது; வெட்டு ஒன்று, துண்டு இரண்டு" என்பீர்களல்லவா? "எவ்வளவோ முயன்று பார்த்தேன்; அவனோடு என்னால் ஒப்புரவாக, சமாதானமாய் வாழ, முடியவே முடியாது" என்று கூறாதிருங்கள்.

"தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு; ஆகையால் உமக்குக் கொண்டு வரப்பட்ட என் காணிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லி, அவனை வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவன் அதை ஏற்றுக்கொண்டான்" (ஆதி.33:11).

'போதுமானது எனக்குண்டு' என்று ஏசா சொன்னபோதிலும், யாக்கோபு தனது வெகுமதிகளைத் தன் தமையன் ஏற்றுக்கொண்டே தீரவேண்டும் என்று அவனிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டான். நாமும் மற்றவர்களோடு ஒப்புரவாக, சகோதர, சகோதரிகளுக்குப் பரிசுகளைக் கட்டாயப்படுத்தி வழங்க வேண்டும். யாக்கோபின் ஒப்புரவாகுதலின் அடிச்சுவட்டை அவ்விதமே நடைமுறைப் படுத்துவோமாக. கர்த்தர்தாமே நமக்கு நிச்சயமாய்த் துணை செய்வார்.

இந்த விடுதலைத்தூதன் இதழின்மூலமாக நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களது சாட்சிகளை, முகவரியுடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

THE SOLUTION TO CONFUSION

Pastor M.K. Sam Sundaram

"For your shame ye shall have double; and for confusion they shall rejoice in their portion: therefore in their land they shall possess the double: everlasting joy shall be unto them" (Isaiah 61:7).

There are situations in our life where we find ourselves confused beyond measure. We get confused when things go awry. When everything is in a state of complete disorder, it is said to be in utter confusion. It is also possible to be confused in your mind. When this happens, you are so perplexed that you do not know what to do. Believers and servants of God sometimes find themselves in such situations. They are unable to tell any one about their knotty problems and, consequently, find no solution to their confusion. Here is a true story to illustrate this point.

There was a young man who had got into debts because of gambling. He knew he could never pay off the huge amount of debt and therefore wondered why he should live any longer. He took a piece of paper and pen, wrote down all his debts, and at the end wrote, "Who will pay off my debts?" He then loaded his pistol and had one last look at the huge sum of money he owed to many people. At last, in a confused state of mind he fell asleep.

In those days, the Czar of Russia used to go on rounds at midnight to know the real state of his subjects. As he went round, he found this sleeping young man and the letter before him. He found out that the young man was the son of an old friend of his. Moved with compassion, he wrote, "Alexander" below the sentence, "Who will pay off my debts?" Early the next morning a messenger from the king brought a bag of money and handed it to the young man. Quite unexpectedly, the young man found a solution to his confusion when his question, "Who will pay off my debts?" was answered by the Czar of Russia.

If in the physical world you have a king who is willing to pay off your debts, in the spiritual realm we have our Heavenly Father who will offer a lasting solution to your confusion. He will seal your letter which describes your confusion with His eternal name and you will have everlasting joy.

In the Bible we find people who were in a confused state sometime or other and we are told how God stepped in and delivered them so that they could rejoice. I would like to confine my study to the confusion in the lives of three characters in the Bible.

A GREAT INVASION IN THE LIFE OF KING JEHOSHAPHAT

"O our God, wilt thou not judge them? for we have no might against this great company that cometh against us; neither know we what to do: but our eyes

are upon thee" (II Chronicles 20:12).

We infer that King Jehoshaphat was at the end his tether from his words to the Lord, "... neither know we what to do." It is only when some one is in a confused state does he utter such words. Very often when we are confused, we mumble away to ourselves, "I don't know what to do."

Jehoshaphat found himself in a predicament when the Moabites, Ammonites and men from Mount Seir came against him. This indeed was something which Jehoshaphat could not handle.

In our Christian life we find ourselves in a tight corner when people try to cast us out of our God-given inheritance. It could be material possession or something spiritual as in the case of a servant of God named Brenham. A law suit was filed against him to take away his right to publish a spiritual magazine. But since it was an inheritance which God had given him, none could deprive him of it.

King Jehoshaphat was in a state of fear and confusion when he found that the enemies who had come against him were formidable. But soon he found a solution by resolving to seek the Lord's help. He proclaimed a fast, and when all Judah had gathered together, he stood before them in the courtyard of the temple of God and prayed a long prayer extolling the greatness of God and recounting His goodness to the children of Israel. He pointed out how the enemies had come to drive His people out of their inheritance which He had given them. He concluded his prayer saying, *"O our God, wilt thou not judge them? For we have no might against this great company that cometh against us; neither know we what to do: but our eyes are upon thee"* (II Chr.20:12).

Contrary to what Jehoshaphat did, some people fix their eyes on man when they need help. Isaiah 31:1 says, *"Woe to them that go down to Egypt for help; and stay on horses, and trust in chariots, because they are many; and in horsemen, because they are very strong; but they look not unto the Holy One of Israel, neither seek the Lord!"* From this we understand that some people rely on human strength and we also know that some others' eyes are set on gold and silver. But, Jehoshaphat reposed his trust in God and God alone.

If you read this chapter closely, you will find all that Jehoshaphat did before he faced his enemies. He proclaimed a fast throughout all Judah (II Chr. 20:3); he prayed (vv. 5-12); he encouraged the people of Judah to have faith in the Lord and believe His prophets (v.20), and he appointed men to sing to the Lord and to praise Him for the beauty of His holiness as they went out at the head of the army saying, *"Praise the Lord, for His mercy endures forever"* (v.21).

The result was, God gave an unprecedented victory to Jehoshaphat and the people of Judah. How did this happen? The enemies fought against their own confederates and they killed one another as the Lord set an ambush against the enemies.

In this context I am reminded of a true incident. A church bought a piece of land,

and as it was being fenced, two brothers rose against the people who were at the job and told them that they should not cross a particular point and if they did, they would kill them. A few months later, as the brothers were watching the T.V., a quarrel arose between them and one of them killed the other. God fights for His children in exceptional ways.

Dear child of God, when you are confused, follow the steps Jehoshaphat took in his confusion and get a solution.

INEXORABLE AFFLICTIONS IN THE LIFE OF JOB

Behold, I go forward, but he is not there; and backward, but I cannot perceive him: On the left hand, where he doth work, but I cannot behold him: he hideth himself on the right hand, that I cannot see him: But he knoweth the way that I take: when he hath tried me, I shall come forth as gold (Job 23:8-10).

Job was confused because wherever he went, he could not find God. He went forward, but God was not there. He went backward and he could not see Him. On the left side where He would be at work, he did not see Him. Similarly, on the right, he could have no glimpse of Him because He hid Himself. When you wish to see some one, if you are not able to see him however much you try, you feel frustrated. This was Job's experience.

There are times in a Christians's life something similar to Job's experience happens. You long to see God, but God's face is hidden from your view. You spend hours in prayer but you don't feel God's presence. At such times you feel confused.

When you are in such a painful situation, you are so desperate that you say, "Where is God?" as though you are forced to doubt His very existence. But, consider Job who was afflicted inexorably in his body. The pain he suffered was excruciating. It is little wonder that he said in verse 1, *"Even today is my complaint bitter: my stroke is heavier than my groaning."*

When you are in great pain physically or mentally, you groan. This very act of groaning indicates the state of confusion you are in. But, here comes the promise of God, *"... for confusion... everlasting joy shall be unto them"* (Isaiah 61:7). Claim this promise every time there is confusion in your life.

In his inexplicable afflictions Job leaned on God. In his weakness he asserted that God would put His strength in him (v.6). In Tamil it is said, "என் மேல் தயை வைப்பார்." In other words, God put His love, gentleness, loving kindness and strength into Job. It is amazing how Job could trust God in the face of great agony caused by afflictions in his body and rejection by his wife. But, his faith in God is so strong that he says, *"Though he slay me, yet will I trust in him"* (Job 13:15): David the psalmist confessed, *"Yea, though I walk through the valley of the shadow of death, I will fear no evil"* (Ps.23:4).

Job endured trials and tribulations which were beyond human endurance and yet he depended on God and trusted in Him as

no one else would have done under such trying circumstances. This is a lesson we ought to learn from Job.

What happened after he endured relentless sufferings? God blessed him with a long life. The Bible says, he lived for 140 years, had 10 children and saw his sons and their children up to the 4th generation. This means he died a happy old man. God made him prosperous and gave him twice as much as he had before.

Job's unshakable faith in God and his complete reliance on Him was the solution to his confusion.

A GODLY INTERVENTION IN THE LIFE OF SAUL OF TARSUS

"And he trembling and astonished said, Lord, what wilt thou have me to do? And the Lord said unto him, Arise, and go into the city, and it shall be told thee what thou must do" (Acts 9:6).

Saul, a Benjaminite from Tarsus, was a menace to the disciples and followers of Christ because he was breathing out murderous threats against them. He was such a fanatic that he had obtained letters of permission from the high priest to the synagogues in Damascus to take men and women of the new faith as prisoners to Jerusalem.

God intervened in the life of this young man in a strange way. As he was heading towards Damascus, suddenly a light from heaven flashed around him. He fell to the ground and heard a voice say to him, *"Saul, Saul, why do you persecute me?"* Saul became blind. He was dazzled by the light and confused by the voice he had never heard before. He inquired who it was who spoke to him. Jesus told him that He was Jesus of Nazareth whom he was persecuting. Trembling with fear and astonished, he said to the Lord, *"Lord, what wilt thou have me to do?"*

The man who had power and authority in his hands to take Christians in Damascus as prisoners to the high priest in Jerusalem was now perplexed. Things did not work out the way he had planned. His question, *"Lord, what wilt thou have me to do?"* shows he was not in a position to think of the future course of action, and therefore wanted to know the will of the Lord.

Jesus told him to go into the city where he would be told what he must do. Saul listened to the voice of Jesus and obeyed His instructions.

The Lord had predestinated Saul as a vessel of honour. His words to Ananias, *"Go thy way: for he is a chosen vessel unto me, to bear my name before the Gentiles, and kings, and the children of Israel:"* clearly indicate that Saul was a vessel chosen by the Lord Himself.

When the Lord finds you going in a wrong way, He wishes to intervene in your life and guide you in the right path. He has great plans to use you as a vessel of honour if you listen to His voice and ask Him what He would want you to do.

The Lord revealed His plans to Ananias and told him that He had chosen Saul as His vessel not only to be a witness to the

Gentiles, kings and the children of Israel, but also to suffer for His name's sake.

Dear believer, when the Lord intervenes in your life, surrender yourself to His will as Saul did. The Lord will then use you as His vessel and you will be a soul winner as Saul (Paul) was.

Whatever be the cause for your confusion, whether it is as formidable as a great invasion, or sufferings in your body which are beyond endurance, or situations in which you find yourself acting according to your own will and not seeking the will of God, know that there is a solution to it if you look only to God, lean entirely on Him and listen carefully to His voice and obey.

May the Lord give you a life free from confusion, grant you victory over your enemy and strength in your weakness and, above all, use you as a vessel of honour for His glory.

ஊழியர் பகுதி

சாது சுந்தர்சிங்

தொடர்ச்சி

சாது சுந்தர் சிங்கின் ஊழியங்கள்

மக்கள்மீது கொண்ட பாசத்தாலும் ஆத்தும பாரத்தாலும் இப்படி ஊர் ஊராக அலைந்து திரிந்து ஊழியம் செய்யும் காலத்தில், மலைகளைக் கடந்துபோய்க் கொண்டிருக்கும்போது இரண்டு பாதைகள் பிரிவதைக் கண்டு எந்த வழி போவதென்று தெரியாது தவித்தபோது, இரு வழிகளில் ஒரு வழியைத் தெரிந்துகொண்டு, ஒரு கிராமத்தை அடைந்தார். பிறகு, தான் சென்றது தவறான வழி, போய்ச் சேரவேண்டிய பாதையிலிருந்து பதினொரு மைல் விலகி வந்துவிட்டதாக அறிந்துகொண்டார்.

திரும்பி தான் போய்ச் சேரவேண்டிய ஊரை நோக்கி நடந்தார். வழியில் ஒரு மனிதனைக் கண்டு அவனோடு பேச ஆரம்பித்தார். அந்த மனிதனோ ஓர் இரகசிய விசுவாசி. சுந்தர் கிறிஸ்துவைப்பற்றிச் சொன்ன போது அந்த மனிதன் தன் ஆடைக்குள்ளே மறைத்து வைத்திருந்த ஒரு புதிய ஏற்பாட்டை எடுத்துக்காட்டி, "ஐயா! நானும் ஒரு கிறிஸ்தவன்தான். உங்களை ஓர் இந்து மதத் துறவி என்று நினைத்துதான் இத்தனை நேரம் அமைதியாக இருந்தேன். இந்தப் புத்தகத்தில் எனக்கு விளங்காத பகுதிகளும் சந்தேகங்களும் இருக்கிறது. தயவுசெய்து எனக்கு விளக்கமாகப் போதித்து சந்தேகங்களைத் தீர்ப்பீர்களா? என்றான்.

சாது சுந்தர் சிங் அவனுடைய எல்லா ஐயங்களையும் போக்கினார். தனித்து வாழ்ந்து வந்த ஒரு விசுவாசியின் சந்தேகங்களைப் போக்கியதில் இவருக்கு அதிக திருப்தி. இவன் ஒருவனுடைய சந்தேகங்களைத் தீர்ப்பதற்குத் தான் தேவன் தன்னைப் பதினொரு மைல் தூரம் அதிகமாக நடக்கவைத்தாரோ என்று எண்ணி பிதாவின் சித்தத்தைப் புரிந்துகொண்டார்.

சுந்தரின் ஊழியத்திலும், அவர்மூலம் மக்களின் வாழ்க்கையிலும் தேவன் செய்த மகத்தான காரியங்களையெல்லாம் பலர் கண்காணித்து வந்தனர். வட இந்தியாவில் "நூர் அவ்ஷான்" என்ற பத்திரிகையில் சுந்தரின் ஊழியத்தால் நடந்த பலன்கள் வெளியானது. இவரை அப்பத்திரிகையாளர்கள் ஒருமுறை பேட்டி கண்டனர்.

ஒரு முறை ஜலாலாபாத்தில் சுந்தர் சிங் கொடியவர் வசம் அகப்பட்டுக்கொண்டார்.

இவரை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று சில சதிக்காரர் கங்கணம் கட்டியிருந்தனர். அந்தச் சதியை சுந்தரிடம் ஒரு நல்லவன் வந்து சொல்லி, அவரைத் தப்பித்துக் கொள்ளும்படி வேண்டினான்.

இதைக் கேட்டதும் சுந்தர் அபாயமற்ற இடத்திற்குப் புறப்பட்டுப்போய் ஒரு சத்திரத்தில் அடைக்கலமானார். அந்தச் சத்திரத்தில் பூச்சிகளும் கொசுக்களும் அதிகமிருந்தது. குளிரும் பனியும் பெய்து கொண்டிருந்த இரவு அது. பொழுது விடிந்ததும் குளிருக்காக நெருப்பு மூட்டி குளிர் காய்ந்துகொண்டிருந்தார். அப்போது இரண்டு முகமதிய மனிதர்கள் இவரிடம் வந்து, "ஐயா! நாங்கள் உம்மைக் கொல்ல வந்தவர்கள். ஆயினும் கடந்த இரவில் பெய்த பனியால் நீங்கள் இறந்துபோகமலிருந்தால் நீர் அல்லாவின் அருளைப் பெற்ற மனிதர் என்று தீர்மானித்தோம். அப்படியே நீங்கள் சுகத்தோடு இருப்பதைப் பார்த்துத்தான் நாங்கள் உமக்குப் பயந்து உம்மைக் கொல்லும் திட்டத்தை விட்டுவிட்டோம். எங்களை மன்னித்து விடுங்கள். எங்களை நீர் மன்னித்ததற்கு அடையாளமாக எங்கள் இல்லம் வந்து தங்கி, எங்களின் உபசரிப்பை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்" என்றனர். சுந்தரும் அப்படியே அவர்களுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு அவர்களின் ஊருக்குப்போய் அவர்களோடு ஒரு வாரம் தங்கி, ஜீவ வசனத்தைச் சொல்லி பலரைப் பரலோகத்திற்கு நேராய் வழி நடத்தினார்.

காக்கும் வல்ல மீட்பர்

தன் பரம பிதாவுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட தெய்வ மனிதனாக துன்பங்களையும் துயரங்களையும் பாடுகளையும் சகித்துக்கொண்டார் சுந்தர். வேதத்தில், "அவர் குமாரனாயிருந்தும் தாம் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்" (எபி.5:8) என்னும் வசனத்தின்படி பாடுகளைச் சகிப்பதால் இன்னும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் சுந்தர். காடுகளையும், மேடுகளையும் கடந்து நடந்தே சென்றார். பல கிராமங்களில் இவ்ரைப் புறக்கணித்தனர். விஷ ஜந்துக்கள், காட்டுப் பிராணிகள் மத்தியிலும் வசிக்கவேண்டிய சூழ்நிலைகளும் இவருக்கு ஏற்பட்டது.

ஒரு நாள் தோரியோ தாலுக்காவில் ஒரு கிராமத்தில் சுந்தர் தங்கியிருந்தபோது, அவ்வூர் மக்கள் இவரைத் துன்பப்படுத்தினார்கள். எனவே, இவர் பகலெல்லாம் கிராமத்தில் ஊழியம் செய்து கிராமத்திற்குப் பக்கத்திலிருந்த காட்டில் கெபி ஒன்றில் இரவைக் கழிப்பார். ஒரு நாள் ஊழியம் செய்து அதிக களைப்புற்று சோர்வோடு அந்தக் கெபிக்கு வந்தார்.

போர்வையை எடுத்து, படுப்பதற்காக இடத்தைப் பார்த்தார். அங்கு ஒரு பெரிய சிறுத்தை அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். உள்ளுக்குள் பயம்தான். நடுங்கிக் கொண்டே ஜெபித்தார். தேவன் அம்மிருகத்தினின்று இவரைத் தப்புவித்தார்.

இவ்வாறே மற்றொருமுறை கிராமத்து மக்களால் துரத்தப்பட்டபோது, சாது சுந்தர் சிங் வெகு சோகத்தோடே ஒரு பாறையின்மேல் உட்கார்ந்து தியானித்துக்கொண்டிருந்தார். தியானத்தை முடித்துக் கண் திறந்துப் பார்த்தால் அவர் முன் கருஞ்சிறுத்தை ஒன்று படுத்து நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தது. சுந்தர் மெல்ல எழுந்து கிராமத்துக்குள்ளே போய் விட்டார். இதைக் கேள்விப்பட்ட யாவரும் உண்மையிலேயே சுந்தர் ஒரு தேவமனிதன் என்று நம்பினார்கள்.

கங்கையில் சத்திய வசனம்

பொங்கிப் புரண்டு வரும் கங்கை நதியோரத்தில் உள்ள ரிஷிகேஷ் என்னுமிடம் பக்தர்கள் புனித நீராடும் இடம். மக்கள் கூடியிருந்த அவ்விடத்தில் பல இந்து சாதுக்களும் இருந்தனர். அந்த இடத்தில் காவி உடையணிந்த சாது சுந்தர் சிங் புதிய ஏற்பாட்டைத் திறந்து உரத்தக் குரலில் இரட்சகராகிய இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பலர் இவரைப் பரியாசம் செய்ய ஆரம்பித்தனர். சிலருக்குக் கோபமும் வந்தது. பலர் சட்டை செய்யாது இருந்தபோது, ஆங்காங்கே ஒரு சிலர் இவர் சொல்வதைக் கவனித்துக் கேட்டனர். சுந்தர் சிங் பேசிக்கொண்டிருந்தபோது திடீரென்று ஒருவன் மணலை வாரி சுந்தரின் முகத்தில் அடித்தான். முகத்திலும் கண்களிலும் மணல். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சில நல்லவர்கள் மணல் எறிந்த அந்த மனிதனைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

சுந்தர் சிங் அமைதியாக நகர்ந்து நதியில் கண்களைக் கழுவித் திரும்பிவந்து, போலீஸ் பிடித்து வைத்திருந்த அம்மனிதனை விட்டுவிடும்படி வேண்டிக்கொண்டார். இவரின் பொறுமையையும் அன்பையும் அம்மக்கள் கண்டு வியந்தனர்.

தவறு செய்த அந்த மனிதன் சாதுவின் செயலைக் கண்டு, உள்ளம் உருகி மனஸ்தாபப் பட்டு சுந்தரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். சாது பிரசங்கித்துக்கொண்டிருந்த செய்தியைத் தனக்குச் சொல்லும்படி கேட்டான். இவரும் அவனுக்கு ஆண்டவரைப் பற்றி எடுத்துச் சொன்னார். அவன் சாதுவின் ஊழியத்தில் சில நாட்கள் பங்கேற்று அவர் போகுமிட மெல்லாம் அவருடன் சென்று வந்தான்.

நீண்ட தூரம் நடந்து ஊழியம் செய்து வந்ததால் சாது களைத்துப்போய், பசியாலும், தாகத்தாலும் தொய்ந்துபோய், அந்த மாலை நேரத்தில் தொலிவாலா என்ற கிராமத்தில் தங்குவதற்குத் திட்டமிட்டார். அங்கிருந்த ஒரு விடுதியில் தங்கவேண்டுமென்று இடம் கேட்டார். அவர்களோ இவர் ஒரு கிறிஸ்தவர் என்று இடம் தர மறுத்துவிட்டனர். அவ்வூர் மக்களும் இவரை விரட்டிவிட்டனர்.

(தொடரும்)

வேதபாடம்

உன்னதப்பாட்டு

பாடம் 19 (தொடர்ச்சி)

11 ஆம் வசனம்

"அவர் தலை தங்கமயமாயிருக்கிறது" (உன்.5:11);

இது, நேசரின் தெய்வீக தன்மைகளைக் காட்டுகிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஜீவனையும், மகிமையும் உடையவராய்த் திகழ்ந்தார்.

"ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ.2:9).

இவ்வசனத்தை மற்றொருவிதமாய்க் கூறுவோமாயின், இயேசு கிறிஸ்துவினிடத்தில் இல்லாதது தேவனிடத்தில் இல்லை என்பதாகும். இயேசுவும் தேவனும் ஒருவரே. இவரே சபைக்குத் தலைவர்.

மூன்று அம்சங்களில் இயேசு கிறிஸ்துவே சபைக்குத் தலை என்பதை நிரூபிக்கலாம். கொலோ. 1:16,17 வசனங்களின் வாயிலாக, அவர் சிருஷ்டிப்பில் தலையாய் விளங்குகிறார். கொலோ. 1:18 இன்படி, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த முதற்பேறானவராய் இருக்கிற படியால், சரீரமாகிய சபைக்கு அவர் தலையா யிருக்கிறார். எபேசியர் 1:18-23 வசனங்களின் படி, பரமேறிச்சென்று பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதால், அவர் சரீரமாகிய சபைக்குத் தலையாயிருக்கிறார் என்று அறிய முடிகிறது.

"அவர் தலை தங்கமயமாயிருக்கிறது" (உன்.5:11);

[illegible]

[illegible]

"அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்" (யோபு 23:10) என்றான் யோபு. "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதா யிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1 பேதுரு 1:7) என்று கூறுகிறார் பேதுரு.

எபேசியர் [illegible] இன்படி, சபையின் தலையாய் விளங்கும் இயேசுவின் சரீரத்தில் இணைந்துள்ள நாமும் அவரைப் போலவே [illegible] தங்கமாய் இருக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். அவர் சோதிக்கப்பட்டதால், கிறிஸ்தவ வாழ்வில் சோதிக்கப்படும் நமக்கு அவர் உதவிசெய்ய வல்லவர் என்று எபி.2:18 இலும், நமது பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கக்கூடியவர் என்று எபிரெயர் 4:15 இலும் காண்கிறோம். ஆகையால், ஆண்டவராகிய [illegible] விசுவாசிகளாகிய நம்மையும் தம்மைப்போல சுத்தப் பொன்னாக மாற்றுவாரல்லவா?

"அவர் தலைமயிர் சுருள் சுருளாயும், காகத்தைப்போல கறுப்பாயுமிருக்கிறது" (உன்.5:11).

இங்கு, மணவாட்டி தன் நேசரின் நித்தியமான புத்துணர்ச்சியை, நித்திய பெலனை, என்றென்றுமாயுள்ள அவரது உற்சாகத்தை—துடிதுடிப்பை—அவரது நித்திய ஜீவனைக் குறித்து வர்ணிக்கிறதைக் காண்கிறோம். அவரது தலைமயிர் காகத்தைப் போல் கறுப்பாயும், சுருள் சுருளாயும் காணப்பட்டது, அவரது இளமைத் தோற்றத்தைக் குறிப்பதாகும். ஆம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் அல்லவோ? (எபி.13:8).

பொதுவாக, மனிதன் தன் முதிர்ந்த பருவத்தை எட்டும்போது, அவனது தலைமயிர் நரைக்க ஆரம்பிக்கிறது. *"அந்நியர் அவனுடைய பலத்தைத் தின்கிறார்கள்; அவனோ அதை அறியான்; நரைமயிரும் அவனில் தெளித்திருக்கிறது, அவனோ அதை அறியாதிருக்கிறான்"* என்று, ஓசியா 7:9 இல் காண்கிறோம். எப்பிராயீமின் தலைமயிரில் ஆங்காங்கே நரை மயிர் காணப்பட்டது. இது அவனது பெலன்—சத்துவம்—குறைந்து போனதைச் சுட்டிக்காட்டுகிறது.

ஆவிக்குரிய வாழ்விலே எப்போதும் ஒரே சீரான உற்சாகமுடையவர்களாக இருக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். சபையில் இன்று அநேக விசுவாசிகளுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய வல்லமை, உற்சாகம் ஆரம்ப நிலையிலிருந்ததுபோலன்றி, குறைந்து காணப்படுகின்றது. இது தலைமயிர் நரைத்துக் காணப்படுவதற்கு ஒப்பாகும்.

தேவனுடைய மனிதனான தானியேலும், வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதின யோவானும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தலைமயிர், வெண்பஞ்சைப் போலவும் (தானியேல் 7:9), உறைந்த

மழையைப்போலவும் (வெளி.1:14) இருந்ததாகத் தரிசித்தனர். இது, மணவாட்டியின் காட்சிக்குச் சற்று வேறுபட்டுக் காணப்பட்டாலும், சம்பவங்களின் பின்னணியை நோக்கும்போது அது சரியே. இந்த வெண்பஞ்சு நிறம் ஆண்டவரின் ஆழ்ந்த அறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றது.

நமது நேசர் அறிவில் சிறந்தவர்; ஞானத்தில் பெரியவர்; நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். நித்திய நித்தியமாக அவரது வல்லமை மாறாது என்பதை அறிந்து கொள்வோமாக.

மணவாட்டி தன் நேசரைக் கண்டது போல நாமும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஆச்சரியமான தோற்றத்தையும், உயர்ந்த குணநலன்களைக் கொண்ட அவரது அழகு ரூபத்தையும் நமது மனக்கண்முன் இருத்தி, எப்போதும் தேவனைத் துதிக்கவேண்டும். ஆம், அவர் பதினாயிரங்களில் சிறந்தவரே; அவர் தலை தங்கம்தான்; தலைமயிர் காகத்தைப்போலக் கருமையாயும் சுருள் சுருளாகக் காணப்படுவதும் உண்மையே. நாம் எப்போதும் நமது நேசரில் மகிழ்ந்துகொண்டேயிருப்போமாக.

பாடம் 20
(உன்னதப்பாட்டு 5:12-14)

மணவாட்டி தன் நேசரின் ஆள்தத்துவத்தைக்குறித்து எருசலேம் குமாரத்திகளுக்கு வர்ணிக்கிறதை இவ்வசனங்களில் காண்கிறோம்.

12 ஆம் வசனம்

"அவருடைய கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் புறாக்கண்களுக்கு ஒப்பானவைகளும், பாலில் கழுவப்பட்டவைகளும், நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" (உன்.5:12).

கண்கள் உள்ளத்தின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் அவயவங்களாய்க் காணப்படுகின்றன. கடிதங்கள் வாயிலாக, தூரத்திலிருப்பவர்களுக்குச் செய்திகளை அறிவிக்கிறோம். ஆனால், கண்களின் பார்வையோ அருகாமையில் உள்ளவர்களோடு பேச எண்ணும் மனதின் எண்ணங்களை அவ்விதமே பிரதிபலிக்கின்றது. மணவாட்டி, **தான் நேசருக்கு அருகாமையில் இருப்பதை மறைமுகமாக இங்குத் தெரிவிக்கிறாள்.** நேசர், தம் மணவாட்டியின் நெருங்கின உறவில் அறியப்பட்டிருக்கிறார் என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது.

"அவருடைய கண்கள் ... புறாக் கண்களுக்கு ஒப்பானவைகள்" (உன்.5:12).

மணவாட்டியின் கண்களும் புறாக் கண்களுக்கு ஒப்பானவையே என்று முன்னர் கண்டிருக்கிறோம். தம்மைப்போல பார்வையைக்கொண்ட மணவாட்டியைத்தான் நேசர் தெரிந்தெடுத்துள்ளார். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று யோர்தான் நதியிலிருந்து கரையேறினவுடனே, பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல அவர்மீது வந்து இறங்கினார். அந்த ஆவியின் நிறைவு, அவருடைய கண்களை அன்புள்ள பார்வையினால் நிறைத்தது. அதனால்தான் அவர் தம்முடையவர்களை உளம் கனிந்து நேசிக்கிறார். **ஆம், பரிசுத்த ஆவியானவரின்றி உள்ளத்தில் அன்பு ஊற்றப்படுகிறதில்லை. என்னே, அவரது அன்பின் பார்வை!**

"தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் புறா..." (உன்.5:12).

நதிகளின் தண்ணீர் தெளிந்து, பளிங்குபோல் காணப்படும். இது அவரது தெளிவான, ஒளி மிளிரும் பார்வையைச் சுட்டிக்காட்டுகின்றது.

"பாலில் கழுவப்பட்டவைகள்" (உன்.5:12).

"அவளுடைய நசரேயர் உறைந்த மழையைப்பார்க்கிலும் சுத்தமும், பாலைப் பார்க்கிலும் வெண்மையும், பவளத்தைப் பார்க்கிலும் சிவப்பும், இந்திரநீலத்தைப் பார்க்கிலும் மேனியுமாயிருந்தார்கள்" (புலம்பல் 4:7).

இங்கு, *"பாலைப்பார்க்கிலும் வெண்மை"* என்று கூறப்பட்டுள்ளது காண்க. ஆம், நேசரது பார்வையில் காணும் எண்ணங்கள் அனைத்தும் பாலைப் பார்க்கிலும் சுத்தமும் பிரகாச மானவைகளுமாகும். மட்டுமன்றி, அவரது பார்வையின் எண்ணங்கள் மற்றவர்களையும் சுத்திகரிக்கும் வல்லமை கொண்டவை.

"நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகள்" (உன்.5:12).

விலையேறப்பெற்ற கற்கள் ஒரு மோதிரத்தில் எவ்விதம் நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டிருக்கின்றனவோ அதுபோன்று, அவரது கண்கள் மிக நேர்த்தியாய் அவைகளுக் குரிய சிறந்த இடத்திலே பதிக்கப்பட்டிருந்தன. இது, அவரது சரியான நிதானிப்பின் பார்வையை விளக்குகின்றது. நேசர், அவளை முற்றிலும் விளங்கினவராய், தயவோடு கண்ணோக்கினார்.

இன்றும், நமது நேசராகிய இயேசு கிறிஸ்து தமது பிள்ளைகளை நன்குப் புரிந்துகொண்டவராய், அன்போடு பார்த்துக் கொண்டிருக்கிறார். மற்றவர்கள் தவறான கோணத்தில் பார்க்கிறதுபோல, நமது நேசர் விசுவாசிகளைக் காண்கிறதில்லை.

சுருங்கக்கூறின், நேசர் தமது மணவாட்டியை அருகாமையில் பார்த்தார்; கனிவோடு அவளைப்பார்த்தார்; தமது அன்பின் தேர்ச்சிக்குள் அவளை வழிநடத்தினார். மேலும், அவருடைய கண்களின் பார்வையில் யாதொரு களங்கமும் குறைகளும் காணப்படவில்லை. சுத்தமான எண்ணங்களோடு விளங்கிக்கொள்ள வேண்டிய முறையாய் அவளை விளங்கிக் கொண்டார். அவர் அவளைத் தவறாகவோ, தகாத பார்வையுடனோ கண்டதில்லை.

நமது நேசராகிய இயேசு கிறிஸ்து, இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் திரள் கூட்டமான ஜனங்களை மேய்ப்பனில்லாத ஆடுகள்போலக் கண்டு, அவர்கள்மீது மனதுருகினார் என்று, மத்தேயு 9:36 இல் காண்கிறோம்.

தன் சகோதரனை நினைத்து அழுது புலம்பிய மரியாளைக் கண்டபோது அவரும் ஆவியில் கலங்கிக் கண்ணீர்விட்டார் என்று, யோவான் 11:33-35 இல் காண்கிறோம்.

நாயீன் ஊர் விதவையின் மகன் மரித்து, அடக்கம் பண்ணப்படக் கொண்டுபோன போது, கர்த்தர் அவளைப்பார்த்து, அவள்மேல் மனதுருகி, "அழாதே" என்று சொல்லித் தேற்றி, அந்த வாலிபனை எழுப்பினதை, லூக்கா 7:11-15 வசனங்களில் காணமுடியும்.

ஆம், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது சூழ்நிலைகளைக் கண்டும் காணாதவர்போல இருக்கிறவரல்லர்; நமது துக்கத்திலும் துயரத்திலும் பங்கு கொள்ளுகிறவர். அவரது கண்கள் தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய்த் தங்கும் தெளிந்த புறாக்கண்களுக்கு ஒப்பான வைகள்; பாலில் கழுவப்பட்ட சுத்தமான பார்வையுடைய கண்கள்; உரிய இடத்தில், நேர்த்தியாய்ப் பதிக்கப்பட்டவைகள். ஆகவே, விசுவாசிகளாகிய நாமும் மணவாட்டி கூறினதுபோன்று, *"அவர் பதினாயிரங்களில் சிறந்தவர்"* என்று போற்றுவோமாக.

(தொடரும்)

பெண்கள் பகுதி

ஹஜ்

கிழியுண்ட திரை

குல்ஷான் எஸ்தர்

மறுநாள் பொழுது விடியும் நேரம். நாங்கள் யாவரும் எழுந்துவிட்டோம். காலை வழிபாட்டை முடித்து, சீக்கிரமாகக் காலை உணவை அருந்தி நாங்கள் கஃபாவை நோக்கி நடக்கலானோம். அப்பா செய்திருந்த ஏற்பாட்டின்படி நான் தள்ளு நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டு, தள்ளப்பட்டேன். என் தந்தை முன் நடந்தார். என் தாதியர் எனக்கு இருமருங்கிலும் நடந்தனர். என்னைப்போன்றே அநேக நோயாளிகளும், முதியவர்களும் தள்ளு நாற்காலிகளில் கொண்டு செல்லப்பட்டனர்.

கண்கொள்ளாக் காட்சியைக் காண்கிறவளாக நான் என் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தேன். என்ன எழுச்சியின் காட்சி! எல்லா நாடுகளையும் சார்ந்த பல்லாயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் இறைவனின் வீட்டை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தனர். லண்டனிலோ, லாகூரிலோ, இராவல் பிண்டியிலோ ஒரே நோக்கோடு ஒரே இடத்தில் குழுமிய அத்தகைய பெருந்திரள் கூட்டமான மக்களை நான் அதற்குமுன் கண்டதில்லை. மனித வெள்ளம் அலைபாய்ந்து முன்சென்றது. ஒரே நோக்கம். ஒரே முடிவு. நடந்து சென்றவாறே அனைவரும் தொழுதனர். குர் ஆனிலிருந்து செய்யுள் பகுதிகளை இனிய சத்தத்துடன் உரத்துப்படித்து நடந்தனர். என்ன பரவசம்!

ஹரம் பள்ளிவாசலைச் சுற்றியிருந்த மிகப்பருமனான கோட்டைச் சுவரில் ஆங்காங்கே வாயில்களிருந்தன. உட்புகுமுன் காவலர் எங்களைத் தனித்தனியாக சோதித்தனுப்பினர்.

“கடவுள் பக்தியற்ற துரோகிகள் நமது இத்தூய தலங்களில் நுழைந்து அவற்றைத் தூய்மைக் கேடு செய்ய பலமுறை முயன்றிருக்கின்றனர். ஆகவே இச்சோதனை அவசியமாயிற்று,” என என் தந்தை ஏற்கனவே என்னிடம் கூறியிருந்தார்.

“அத்துரோகிகளுக்கு என்ன தண்டனை அளித்தனர், அப்பா?” என்று அச்சத்துடனே கேட்டேன்.

“சுட்டு வீழ்த்தப்பட்டனர் என்றே நினைக்கிறேன்,” என்று தந்தை கூறியதைக் கேட்டு நான் நடுங்கிப் போனேன். ஆயினும் அந்த அவமதிப்புச் செயலுக்கு அத்தண்டனை சரியே என்று என் மனதைத் தேற்றிக் கொண்டேன்.

பல தூபிகள் முனைப்பாக அமைந்த பெரிய அரங்கமொன்றினுள் நுழைந்தோம். அதன் மத்தியில் 8 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு, இப்பொழுது ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் கூடித் தொழுதற்கேற்ப விசாலமாக்கப்பட்ட பள்ளிவாசல் நின்றது. நாங்கள் எங்கள் காலணிகளைக் கழற்றி அவற்றுக்கு உரித்தான இடத்தில் ஒப்படைத்து, கம்பளவிரிப்பைக் கடந்து சீட்டு பெற்றுக்கொண்டோம். வாயிலைக் கடந்து உள்முற்றத்துக்குச் சென்றோம். பரந்த திறந்த வெளியில் நாங்கள் நின்றோம். அதன் மத்தியில் ‘இறைவனின் வீடு’ என அழைக்கப்பட்ட கனசதுர வடிவான கருங்கல் கட்டிடத்தைக் கண்டோம். அதுவே கஃபா. அழகான கறுப்பு மணிப்பின்னலான துணியால் அது மூடப்பட்டிருந்தது. அத்துணியில் தங்கப் பூவேலையால் கடவுளின் பெயர்கள் பின்னப்பட்டிருந்தன.

பல்லாயிரமான மக்கள் திறந்த வெளியில் குழுமியிருந்தனர். அனைவரின் முகங்களும் கஃபாவை நோக்கியே திரும்பி இருந்தன. கஃபாவைச் சுற்றிலும் மக்கள் இடப்புறமாகச் சுற்றி ஓடினர். அல்லது நடந்தனர்.

பளிங்குப் பாதைகள் மையம் தொடங்கி பல திசைகளில் பிரிந்து சென்றன. இவற்றில் ஒன்றின் வழியாக நாங்கள் நடந்து சென்று வட்டமான ஒரு பகுதியை வந்தடைந்தோம். அங்கு நான் தள்ளு நாற்காலியிலிருந்து ஒரு மரப்பல்லக்குக்கு மாற்றப்பட்டேன். நான்கு திறமைசாலிகள் அப்பல்லக்கைச் சுமந்து சென்றனர். சுழன்று சுழன்று சென்ற மக்கள் கூட்டத்தில் நாங்களும் கலந்துகொண்டோம். கஃபாவைச் சுற்றி மூன்று தடவைகள் ஓடிச் சென்றோம். நான்கு தடவைகள் நடந்து சென்றோம். வெள்ளத்தின் அலையின்மேல் மிதந்து செல்லும் நுரையைப்போல் நான் பல்லக்கில் ஊசலாடிக் கொண்டிருந்தேன்.

வடகிழக்கு முனையில் ஒரு கறுப்புக்கல் இருந்தது. அதை முகமது நபி தம் கையினாலேயே நாட்டினாராம். நாங்கள் அதைக் கடந்து செல்லும் ஒவ்வொரு தடவையும் எங்கள் கைகளை உயர்த்தி, "அல்லாஹ் அக்பர்" (தேவனே எல்லாவற்றிலும் உயர்ந்தவர்) என்று உரத்துச் சொன்னோம்.

பல்லக்குச் சவாரி என்னால் பொறுக்க முடியாதபடி என்னைக் குலுக்கி விட்டது. உதவிக்காக என் தந்தையை ஆவலோடு பார்த்தேன். ஆனால் அவரோ வெப்பத்தையோ, ஜனத்திரளையோ, வசதிக் குறைவுகளையோ பொருட்படுத்தாதவராக முன்நடந்து சென்று கொண்டேயிருந்தார். மெக்காவில் இருப்பதே அவரது வாஞ்சையாகும்.

நாங்கள் கடைசி முறையாகச் சுற்றி வந்தபோது, கறுப்புக் கல்லுக்கு முன்பாக நின்றோம். இறைவன் பரத்திலிருந்து ஆதாமுக்கு எறிந்த கல் அது என்று எனக்குச் சொல்லப் பட்டதை நினைவுகூர்ந்தேன். தேவன், ஆதாம், முகமது, ஒவ்வொருவருமே கைவைத்த அக்கல் எங்கள் சமயப்பற்றுக்குச் சக்திவாய்ந்த சின்னமல்லவா? என் பல்லக்கைச் சுமந்து சென்றவர்கள், முன்பாகச் சென்று பல்லக்கை இறக்கினர். நான் அதன்முன் குனிந்து அக் கறுப்புக் கல்லை முத்தமிட்டேன். வெள்ளியில் பதிக்கப்பட்டு வாசனைப் பொருட்கள் தெளிக்கப்பட்டதாயிருந்த அக்கல் எனக்குக் கல்லாகத் தோன்றவில்லை. என் கண்களை மூடி முகமது நபியோடு பேசுவது போன்றே உணர்ந்தேன். என் உதடுகள் வெப்பமடைய, என்னைச் சுற்றிலும் அருமையான அமைதியை உணர்ந்தேன்.

"தயவு செய்து என்னைக் குணமாக்கும்; இங்குள்ள பிறரையும் குணமாக்கும்," என்று நான் கெஞ்சினேன்.

ஆனால் ஒன்றுமே நிகழவில்லை. சலிமாவும், சீமாவும் என்னைத் தூக்கிப் பிடித்து, உட்கார வைத்தார்கள். நாங்கள் எங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். என் தந்தையின் கலங்கிய விழிகளைக் காண்பதைத் தவிர்க்குமாறு என் தலையைத் தொங்க விட்டேன். அடுத்தபடியாக நாங்கள் ஆபிரகாமின் வழிபாடு இடத்தை நோக்கிச்சென்று, எங்களது விலைமிக்க ஆசையை வழிபாடாக ஏறெடுத்தோம்.

"தயவுகூர்ந்து என்னைக் குணமாக்கும்" என்று கெஞ்சி நான் வேண்டிக்கொண்டேன்.

நாங்கள் செய்யவிருந்த அடுத்த சடங்கு சஃபு மர்வா என்னும் இரு மலைகளுக்கு இடையில் ஓடுவதாகும். இவ்விரு மலைகளும் ஒன்றுக்கென்று அரை மைல் தூரத்தில் பெரிய பள்ளிவாசலின் எல்லைக்குள் இருந்தன. ஆகாரும், இஸ்மவேலும் இம் மலைகளுக்குக் கீழாகப் புதைக்கப்பட்டிருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.

"என்ன இது! இதெல்லாமே வெறும்

விளையாட்டுத்தானோ" என்று என் மனதில் ஒரு சிந்தனை எழுந்தது. ஆயினும் அதை எவருக்கும் சொல்லவில்லை. இங்குக் காரியங்களை எல்லாருமே மிகுந்த கருத்தோடு செயல்பட்டதால் நான் சிரிப்பது இங்குப் பொருந்தாது. நான் தள்ளு நாற்காலியில் வைக்கப்பட்டு சஃபா, மர்வா என்ற இரு மலைகளுக்கும் இடையில் உள்ள பளிங்குப் பாதையில் ஏழு தடவைகள் எடுத்துச் செல்லப்பட்டேன். வீட்டிலிருந்து விரட்டப்பட்ட ஆகார் தன் குழந்தையாகிய இஸ்மவேலுக்குக் குடிக்கத் தண்ணீர் தேடி அவ்விதமாகத் தவித்து நடந்ததை இச்சடங்கு குறித்தது. இறைவன் அப் அ ஜம் ஜம் (ஜீவ தண்ணீர்) என்னும் நீரூற்றை இவ்விடத்திற்கு அருகிலே பொங்கி வரப்பண்ணினார் என்பது மரபு வழக்கு ஆகும்.

மக்கள் விலைகொடுத்து அத்தண்ணீரை வாங்கி, கிண்ணங்களில் ஊற்றி மனதாரக் குடித்தனர். நாங்களும் குடித்தோம். ஹஜ் பாசறைக்காக ஒரு துருத்தியில் அத்தண்ணீரை வாங்கிச் சென்றோம். இத்தண்ணீரில் கொஞ்சம் பாகிஸ்தானுக்கும் கொண்டுசெல்லப்படும். எஞ்சியது என்னைக் குளிப்பாட்ட உபயோகப் படுத்தப்படும்.

அந்நாளின் பெரும் பகுதியை இச்சடங்குகளை நிறைவேற்றுவதில் செலவிட்டோம். உணவு அருந்தாமல் ஓய்வு இல்லாமல் சுற்றியலைந்து அடுத்து நிகழ்ச்சிக்காக ஹஜ் பாசறை வந்து சேர்ந்தோம். அரஃபாத் மலைக்கு நடந்து செல்வதே அடுத்த நிகழ்ச்சி. அரஃபாத் மெக்காவிலிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ளது. இவ்விடத்திலேயே தேவன் ஆபிரகாமை அவனுக்கு முதலில் பிறந்த மகனாகிய இஸ்மவேலைப் பலி செலுத்தும்படியாகச் சொல்லி சோதித்தார் என முஸ்லீம்கள் கூறுகின்றனர். தேவன் ஆபிரகாமின் கீழ்ப்படிதலைக் கண்டு, ஆபிரகாம் தன் மகனைப் பலியிடுவதை நிறுத்தி, பலிக்குப் பதிலாக முள்ளில் சிக்கிய ஒரு ஆட்டுக் கடாவைக் கொடுத்தார் என்பர்.

(தொடரும்)

Youth Section

TRUSTING GOD means looking beyond what we can see to WHAT GOD SEES

(II Kings 6:8-20)

This passage presents two men; one, the prophet Elisha and the other, the prophet's servant. Elisha was an optimist in that he transcended human barriers to see what God had in store for him. Elisha's servant was a pessimist, for he became a creature of circumstances and he could not see anything beyond. Elisha, the servant of God, could see God's hand in every situation, whereas the prophet's servant lacked farsightedness as he was intimidated by the stormy situation.

At some point each of us will encounter dreadful trials and difficulties. We must know how to respond to every threat by holding on to the kind of faith that looks beyond what we can see to what God sees. At the time of extreme pressure, God stretches our faith and deepens our dependence on Him. Without strong, abiding faith, we will quickly quail, especially when the trial is prolonged. Every challenge is an opportunity for God to demonstrate His faithfulness and love. Elisha founded his faith on the sovereignty of God.

What are the contributory factors to that kind of faith?

1. Recall God's dealings in the past: (II Kings 6:8-10)

The king of Syria consulted his servants regarding where his camp would be pitched. Almighty God revealed to Elisha about the movements of the Syrian army. He informed the king of Israel saying, "Beware that you do not pass the place, for the Syrians are coming down there." Then the king of Israel avoided going to the place where the Syrian soldiers were found. Thus God cautioned the king of Israel, who exercised utmost vigilance, not just once or twice. God displayed faithfulness on many occasions in the past and delivered His servant from the formidable foes. Recalling past victories strengthens our faith until it becomes unshakeable. You first win spiritual victories in the mind. When you focus on the truth of God's Word, you win everytime.

2. Reject discouraging words: (II Kings 6:15)

When the servant of the man of God arose early and went out, he saw the enemy surrounding the city with horses and chariots. And the servant told him, *"Alas, my master! What shall we do?"*

Elisha's servant could not make a commitment to trust God in the face of the seemingly unconquerable forces. On the contrary, he yielded to thoughts of fear and failure. He forgot his position as the prophet's servant, and unwisely made disparaging comment which ruled out the possibility of divine intervention. Obviously, he gave room for hopelessness and helplessness. He merely looked at the grim situation and consequently lost sight of the fact that God was in control. Discouragement blinded his eyes to the truth of God's faithfulness and love.

3. Respond to the challenge with a positive confession: (II Kings 6:16).

So the prophet answered, *"Do not fear for those who are with us are more than those who are with them."* Elisha meant that the divine forces outnumbered the human forces. Needless to say that the human prowess is no match for the divine prowess. Elisha the man of God made a profound, prophetic statement. The perennial potential of the ancient statement holds good for all times. We have to believe this incredible truth and apply it to our practical lives. If we do so, we can positively tide over difficulties and cross many hurdles in our lives. It is the confession that makes the difference. Negative confession brings in disappointment and dismal failure. Positive confession which delights the heart of God invariably results in success. Elisha stood firmly against heavy odds and did not yield to pressure. He boldly declared the belief that he could not lose because God was with him.

4. Rely on the power of prayer:

Prayer is the greatest force on earth. "More things are wrought by prayer than the world dreams of." II Kings 6:17 - Elisha

prayed and said, *"Lord, I pray, open his eyes that he may see."* Then the Lord opened the eyes of the young man and he saw. The mountain was full of horses and chariots of fire all around. Elisha, the prophet banked upon God's unlimited resources. He was very sure of the truth that God would supply the prophet's need of protection from His riches in glory by Christ Jesus. The Lord opened the eyes of Elisha's servant so that he could see the miraculous possibilities of answered prayer. The promise recorded in Psalm 50:15-namely, *"Call upon me in the day of trouble. I will deliver you..."* was performed in Elisha's life.

You can face any circumstance with confidence, because it is not your strength or power that brings victory, but God's strength and wisdom. When you place your trust in Him, you draw from His invisible, ineluctable arsenal, stability, stamina and strength. None can oppose you. In all fairness, it must be stated that triumph comes because of God's ability.

Glory be to Him.

சிறுவர் பகுதி

மாயையைப் பாராதே

"மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" (சங்கீதம் 119:37).

கிறிஸ்துவுக்குள் அன்பான என் பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்தப் புதிய ஆண்டை 'கணிணியின் (கம்ப்யூட்டர்) ஆண்டு' என்று கூறும் அளவிற்குத் தற்போது விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. சிறு பிள்ளைகளுக்கேற்ப தொலைக்காட்சியிலும், கணிணியிலும் (கம்ப்யூட்டர்) வரும் மாயச் சித்திரங்கள் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறது அல்லவா? இப்படிப்பட்ட மாயைகளை ரசித்து, தம்பி அவைகளில் விழுந்துபோகாமலிருக்க, இக்கதையை வாசியுங்கள்.

"Spiderman, spiderman, neighbourhood friendly spiderman" என்றுள்ள TVயின் ஒளிபரப்புப் பாடலைப் பாடியவண்ணம் ஓடிவந்து, சாகசங்களைச் செய்துகாட்டினான் மனோ.

ஸ்பைடர்மேன் ஆடை அணிந்து, அவனைப்போலவே நடித்துக் காட்டிய மனோவைக் கண்டு, அங்கு அமர்ந்திருந்த அனைவரும் கரகோஷத்தை எழுப்பினர்.

அன்று ஒரு மாறுவேடப்போட்டி பள்ளியில் நடந்தது. அந்தப் பள்ளியில் பயின்ற மாணவர்களில் சிலர் தங்களுக்குப் பிடித்தமான பொம்மைப்பட கதாபாத்திரங்களைப்போல வேடமணிந்து, காண்போரை மகிழ்வித்தனர்.

போட்டி முடிந்து வீடு திரும்பிய மனோ, உடைகளை மாற்ற மனதின்றி, ஸ்பைடர்மேன் போலவே குதித்துக்கொண்டிருந்தான். எட்டு

வயதான அவன் உற்சாகத்திற்கு அளவே யில்லை. திடீரென்று, அவன் உள்ளத்தில் தானும் ஸ்பைடர்மேன்போல மாடியிலிருந்து இறங்கி மற்றவர்களுக்கு உதவலாமே என்ற எண்ணம் வந்தது.

உடனே, வெகு வேகமாக மாடிப்படியை நோக்கி ஓடினான். இரண்டிரண்டு படிகளாகத் தாண்டி வேகமாக மொட்டைமாடியை அடைந்து, ஸ்பைடர்மேன்போலவே நடிக்க ஆரம்பித்தான். மாடியின் சுற்றுச்சுவர்கள் தாழ்வாக இருந்ததால், கீழே நின்றவர்கள் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

தங்களுடைய மகன் நான்காவது தளத்தின் மொட்டை மாடியில் ஸ்பைடர்மேன் போல நடிக்கிறான் என்பதைக் கேள்விப்பட்டு ஓடிவந்த மனோவின் பெற்றோர், அதிர்ச்சியில் உறைந்தனர். மனோ சுற்றுச்சுவற்றின்மேல் நின்றுகொண்டிருந்தான். செய்வதறியாது அவன் பெற்றோர் அங்கேயே முழங்காற் படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தனர்.

அச்சமயம் அங்கு வந்த அவன் ஓய்வு நாள் பள்ளி ஆசிரியை, சூழ்நிலையைப் புரிந்துகொண்டார்கள். இருதயத்திற்குள்ளே ஜெபித்தவாறே மொட்டைமாடிக்குச் செல்ல, படிகளை வேகமாகக் கடந்தார்கள். மொட்டை மாடியை அடைந்தவுடன்,

“மனோ” என்று அமைதியாக அழைத்தார்கள்.

அவர்கள் சத்தத்தைக் கேட்டுத்தன் சுயநினைவிற்குத் திரும்பிய மனோ,

“ஆண்டி!” என்று சொல்லி, சுவற்றி லிருந்து குதித்து ஓடிவந்து அவர்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டான்.

“மனோ செல்லம்! இப்படியெல்லாம் செய்யக்கூடாது. நீ ஸ்பைடர்மேன் ஆடை அணிந்திருப்பதால் ஸ்பைடர்மேன் ஆகமுடியாது. ஒருவரும் படத்தில்வரும் ஸ்பைடர்மேன் போலச் செய்யவும் முடியாது. ஏனெனில், அது உயிருக்கு ஆபத்து! மீறிச் செய்தால் இறப்பது நிச்சயம்; சரி சரி, கீழே போகலாம் வா” என்று சொல்லி அவனோடு கீழே இறங்கினார்கள்.

அப்பொழுது, “ஆண்டி, நான் கீழே குதித்திருந்தால் இறந்திருப்பேனா?” என்று பயத்தோடும் சந்தேகத்தோடும் கேட்டான் மனோ.

“ஆமாம் மகனே! *மாயையைப் பாராதபடி என் கண்களை விலக்கி உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்* என்று சங்கீதம் 119:37 இல் வாசிக்கின்றோம். ஆகவே, இப்படிப்பட்ட மாயையைப் பார்த்து ஏமாந்து, சாத்தானின் வலைக்குள்ளே சிக்கிக்கொள்ளக் கூடாது. கர்த்தருடைய வழிகளில் நடப்பதையே நினைக்கவேண்டும், சரியா!” என்று அன்போடு அவனை அணைத்துக்கொண்டார்கள்.

அவனை ஜீவனோடு கண்ட அவன் பெற்றோர் அவனை அணைத்தபடியே, ஏற்றவேளையில் ஓய்வுநாள் பள்ளி ஆசிரியையை அனுப்பி, மனோவைத் தப்புவித்த தேவனை நன்றியோடு துதித்தனர்.

அருமைப் பிள்ளைகளே! சித்திரங்களை ஒரு உயிரோவியமாகச் சித்திரித்து, பிள்ளைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் கணினியின் காலக்கட்டத்தில் நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். அப்படிப் பட்ட உயிரோவியங்களாக உங்களைக் கற்பனை செய்துகொள்வது விபரீதம். ஆகவே, கர்த்தருடைய வசனத்திற்குக் கீழ்ப்படிந்து, மாயையைப் பாரீதபடி கண்களை விலக்கிக் காத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சிப்பகுதி

திருவிருந்தின் மகிமை

என் பெயர் மணிமேகலை. நான் கோவைத்தூரில் வசித்து வருகிறேன். நான் அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் அங்கம் வகித்துவருகிறேன். எனது கர்ப்பப்பையில் கட்டி இருந்தது. அதனை அறுவை சிகிச்சை மூலம் அகற்றவேண்டும் என்று மருத்துவர்கள் கூறினர்.

ஆலயத்தின் திருவிருந்து நாளான 10-5-09 அன்று, அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்று, ஜூன் மாதத் திருவிருந்தில் நான் நிச்சயம் பங்குபெற வேண்டுமென்று, ஜெபித்துச் சென்றேன்.

10-5-09 அன்று அறுவை சிகிச்சை நடந்த பதினைந்து நாட்கள் ஆனபின்பு, அறுவை சிகிச்சை நடந்த அதே இடத்தில், ஒரு குண்டூசி அளவில் ஒரு ஓட்டை காணப்பட்டு, அதிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது. மருத்துவர்கள் கொடுத்த பல மாத்திரைகள் வாயிலாகவும் அது சுகமாகவில்லை. முற்றும் படுத்தே இருக்கவேண்டும் என்றும், பயணம் செய்யக்கூடாது என்றும் மருத்துவர்கள் கூறினர்.

ஜூன் மாதம் நடைபெறவிருந்த திருவிருந்தில் பங்குபெறமுடியாத சூழ்நிலை உருவாவதைக்குறித்து துக்கப்பட்டு, டாக்டர் போதகர் வாயிலாகவாவது திருவிருந்து எடுத்தால், நான் சுகமடைவேன் என்று விசுவாசித்து, அதற்காக ஜெபித்து வந்தேன். என் ஜெபத்தைக் கேட்ட தேவன், டாக்டர் போதகர் என வீட்டிற்கு வந்து, இயேசுவின் சரீரத்துக்கு ஒப்பான அப்பத்தையும், அவரது இரத்தத்திற்கு ஒப்பான திராட்சரசத்தையும் கொடுத்தார். தேவ பயத்தோடும், விசுவாசத்தோடும் அதில் பங்குபெற்றேன்.

மறுநாள் காலையில் எழுந்து பார்த்த போது அறுவை சிகிச்சை செய்த இடத்தில் காணப்பட்ட அந்த ஓட்டை அடைபட்டிருந்தது. ஆம், தேவனின் திருவிருந்து நமக்கு சௌக்கியத்தையும், புதுபெலனையும் தருவது அல்லவா? அதினால் நான் சுகம் பெற்றேன். என்னே, தேவனின் திருவிருந்தின் மகிமை!

திருவிருந்தைப் பானம்பண்ணும் விசுவாசிகளே! நீங்கள் அனைவரும் தேவ பயத்தோடும் விசுவாசத்தோடும் அதில் பங்குபெற்று, நல்ல சுகத்தையும் ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அல்லேலூயா!

சபையின் செய்திகள்

அப்போஸ்தல கிறிஸ்தவ சபையின் ஐக்கியத்திலுள்ள சபைப் போதகர்களும், தலைமைச் சபை ஊழியர்களும் இணைந்த கூடுகை

2011, ஜனவரித்திங்கள் நான்காம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ கிளைச் சபைப் போதகர்களும், தலைமைச் சபை ஊழியர்களும் ஒருங்கிணைந்து கூடினர்.

துதி ஆராதனையைக் கிதியோன் ஸ்டான்லி அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். போதகர் தாயன் ராஜ் அவர்கள், அப்போஸ்தலர் 9:10-25 வசனங்களை மையமாகக்கொண்டு, "ஊழியர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்களாய்ச் செயல்பட வேண்டும்" என்னும் தலைப்பில் பவுல் அப்போஸ்தலனின் வாழ்க்கையில் காணும் நான்கு குறிப்புகளைப் போதித்தார்.

பவுல் அப்போஸ்தலன் தேவ சித்தத்தின்படி வேதவசனத்தை அறிவித்தார் (அப்.9:15); அவரது ஜெப ஜீவியம் (அப்.9:11); அவரது இலக்கு (பிலி.3:12); அவர் தனது சரீரத்தை ஒடுக்கி, அடக்கி வாழ்க்கையில்

(1 கொரி.9:27); இவற்றை விளக்கமாகப் போதித்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், தலைவரின் ஆசீர்வாத ஜெபத்தோடு, மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் இனிதே கலைந்தது.

2. அப்போஸ்தல தலைமைச் சபை ஊழியர்களின் கூடுகை

2010, ஜனவரி ஆறாம் நாள் காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல கிறிஸ்தவ தலைமைச் சபை ஊழியர்கள், போதகர் ஜெரோம் அவர்களது துவக்க ஜெபத்தோடு ஒருங்கிணைந்து கூடினர்.

போதகர் எம்.கே.சாம் சுந்தரம் அவர்கள், எபேசியர் 5:14 ஐ மையமாகக்கொண்டு, "கிறிஸ்து உங்களைப் பிரகாசிப்பிப்பார்" என்றுள்ள தலைப்பில், மோசேயின் வாழ்க்கையில் காணும் மூன்று குறிப்புகளைக் குறித்துப் பேசினார்.

மோசேயின் பேச்சு வார்த்தைகள் (யாத்.34:29); அவனது வேலை (யாத்.34:32); அவனது நற்சாட்சி (யாத்.34:30) என்பவைகள் மோசேயைப் பிரகாசிக்கச் செய்தது என்று விளக்கமாகப் பேசினார்.

ஊழியர்கள், தங்களைக் கிறிஸ்து பிரகாசிக்கச் செய்யும்படி, அர்ப்பணித்து ஜெபித்தனர். தலைமைப் போதகரின் ஆசீர்வாத ஜெபத்திற்குப் பின்னர் மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் நன்றே கலைந்தது.

இலக்கிய ஊழியத்தின் ஆரம்ப நாட்கள்முதல், தூதன் இதழுக்குத் துணை ஆசிரியராகவும், ஆலோசகராகவும் விளங்கி, பணியாற்றின திரு. டேனியேல் பலவேசமுத்து அவர்கள், 4.1.2010 அன்று கர்த்தரோடு இருக்கும்படி சென்றுள்ளார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அன்னாரது இலக்கியப் பணிக்கு எங்களுடைய உளமார்ந்த நன்றி.

செய்திகள்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் 8 புதிய படிப்புகள் விரைவில் அறிமுகம்

திறந்த நிலை பல்கலைக்கழகம் நடத்தும், 'எம்.பி.ஏ. ஷிப்பிங் அண்டு லாஜிஸ்டிக் மேனேஜ்மென்ட்' படிப்புக்கு நல்ல வரவேற்பு உள்ளது. எனவே, மாணவர்களின் வசதிக்காக சென்னையில் கல்வி மையம் தொடங்க, பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முதுநிலை பட்டப்படிப்புக்கான கால அளவு அதிகபட்சமாக 6 ஆண்டுகள் என்பது 8 ஆண்டுகளாக நீட்டிக்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலும் 149 சமுதாய கல்லூரிகளுக்கு அரசு அனுமதி தந்துள்ளது. இந்தக் கல்லூரிகள் மூலம் பள்ளிகளிலிருந்து இடைநின்ற மாணவர்கள், 10 ஆம் வகுப்பு மற்றும் பிளஸ்2 வகுப்புகளை, தலா ஓராண்டில் படித்து முடிக்க முடியும். பத்தாம் வகுப்பு படிக்க விரும்புவோர், சமுதாயக் கல்லூரியில் 6 மாதச் சான்றிதழ் படிப்பு முடித்தபிறகு, திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் 6 மாதத் தொழில் படிப்பும் படித்து முடிக்க வேண்டும். இப்படிப் படித்து முடித்தவர்கள் நேரடியாக ஏதாவது ஒரு கல்லூரியில் 2 ஆம் ஆண்டில் சேரமுடியும்.

இதுதவிர, முடி திருத்துதலில் டிப்ளமோ, பல்கட்டும் தொழில் நுட்பப் படிப்பு, எம்.எஸ்.சி ஆடை வடிவமைப்பு படிப்பு உள்ளிட்ட 8 புதியப் படிப்புளைத் தொடங்க உள்ளோம். விரைவில் நாட்டுப்புறக்கலைகள் தொடர்பான படிப்புகளையும் கொண்டுவர உள்ளோம். ஊனமுற்றோருக்குப் பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கு எம்.எட். (சிறப்புக் கல்வி) என்ற முதுநிலை படிப்பும் தொடங்கவிருக்கிறோம். இதற்கு டெல்லியில் உள்ள இந்திய மறுவாழ்வு கழகத்தில் அங்கீகாரம் பெற உள்ளோம். இந்தப் படிப்பில் சேர 800 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று துணைவேந்தர் கல்யாணி அன்புச்செல்வன் தெரிவித்தார். (தினகரன் 14-01-2010)

நம்பிக்கை

ஏன் சடுதியாக இந்தப்புயல் தன் கடுஞ்சீற்றத்துடன்
பயங்கரமாக என்னைச் சுற்றி வீசுகிறது
என்று நான் அறியேன்;
ஆயின், இதை நான் அறிவேன்—தேவன்
என் எல்லா வழிகளையும் கவனமாகக் காக்கிறார்,
நான் அவரை நம்பமுடியும்.

நான் அறியாத என் எதிர்காலத்தை
என் பார்வையினின்று மறைக்கும்
மாயமான திரையை ஒதுக்கிப்பார்க்கவோ,
எனக்காகக் காத்திருப்பது இருளோ, ஒளியோ
என்று நான் அறியவோ இயலாது;
ஆனால் நான் அவரை நம்பமுடியும்.

காலத்தைக் கடந்து, அக்கரையை நோக்கவோ,
இங்கிருக்கையில் ஆற்றிற்கப்பாலுள்ள நாட்டைக் காணவோ
எனக்கு வல்லமை இல்லை;
ஆனால் இதை நான் அறிவேன்:
நான் என்றென்றும் தேவனுடையவனாயிருப்பேன்;
ஆதலால், நான் அவரை நம்பமுடியும்.

Reg.Number TN/CCN/385/09-11. Licence to the post under WPP No.TN.CCN.85/09-11
Regd.Under Regis.of News paper for India No. 1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication: monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrica Channel, Egmore, Chennai - 600 008.

ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின் சார்பாக வெளியிடப்பட்டுள்ள நூல்களின் பட்டியல்

Book - Rs.5

1. உங்கள்மீதுள்ள அபிஷேகம்
2. விசுவாசிகளின் சாட்சிகள்
3. சாட்சிகள் 60
4. உத்தம சாட்சிகள்
5. எஸ்தர்
6. இரயில் நிலையத்தில் இயேசு என்னைக் குணமாக்கினார்
7. இயேசு செய்த அற்புதங்கள் (சாட்சிகள்)
8. ஆவிக்குரிய வேதசத்தியங்கள்
9. தசமபாகங்கள் கர்த்தருக்கு உரியன
10. எனது அநுபவங்கள்
11. Jesus Met Me in Jail
12. Spiritual Truths from the Bible
13. Tithes belong to the Lord
14. My Experiences

Book-Rs.10/-

15. அநாதி கிருபை
16. பக்திவிருத்தி உண்டாக்கும் சாட்சிகள்
17. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம்
18. நீதிமான்கள்
19. கிறிஸ்துமஸ் செய்திகள்
20. இயேசு உயிர்த்தெழுந்தார்
21. நீதியின் சூரியன்
22. பரதேசிகளாகிய நாம்
23. கிறிஸ்தவ குடும்பம்
24. நித்திய பிரதான ஆசாரியர்
25. சபை சபைதானா?
26. யாக்கோபிலிருந்து உதிக்கும் நட்சத்திரம்
27. புத்தாண்டு தேவசெய்திகள்
28. விழித்திரு
29. சிலுவைக்கு அப்பால்
30. வணக்கம்
31. இரட்சிப்பின் சாட்சிகள்
32. ஜீவனுள்ள சாட்சிகள்
33. அற்புத சாட்சிகள்
34. சாட்சிகள்
35. எரி நரகத்திற்குத் தப்பினேன்
36. மாபெரும் மாற்றம்
37. நன்றியுள்ள சாட்சிகள்
38. கல்லூரியில் அற்புதங்கள்
39. நற்செய்தி கதைகள்
40. தீப ஒளி
41. வழிகாட்டும் கதைகள்
42. அந்தக் கடிதங்கள்
43. அந்த மயில்கள்
44. கனமான ஊழியம்
45. வெளிச்சம்
46. ஐக்கியம்
47. இன்னும் சந்தேகமா?
48. கர்த்தருடைய பிள்ளைகள் அனுதினம் அறிக்கை செய்யவேண்டியவை
49. கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்
50. மேய்ப்பரின் அறிவுரைகள்
51. முதலாம் ஆதாம்
52. ஆசீர்வாதங்களின் திறவுகோல்
53. நீரே என் மேய்ப்பர்
54. தேவ ஊழியம்
55. உத்தம ஊழியன்
56. Eternal Grace
57. The Star
58. The New Year
59. Spiritual Questions
60. The Timely Warning
61. The Blessing
62. Your Response to the Cross
63. The Power of Prayer
64. Springs in the Valley
65. A Narrow Escape from Hell

Book-Rs.15/-

66. ஏழு வார்த்தைகள்
67. இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம்
68. இயேசு கூறின உவமைகள்
69. அதிசயமான தேவகிருபை
70. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 4
71. Amazing Grace of God

Book - Rs.20/-

72. என் நேசரின் சத்தம்
73. தேவனுடைய வாக்குத்தத்தச் செய்திகள்
74. வாக்குத்தத்த செய்திகள் 2004
75. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 1
76. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 2
77. ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின் வாழ்க்கை
78. நம்மை ஆசீர்வதித்து நடத்துகிற கர்த்தர்
79. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 1
80. புகழ்பெற்று விளங்கிய வேதாகமப் பெண்கள் 2
81. ஒருவருக்கொருவர்
82. Successful Ministers of the Lord
83. Messages of God's Blessings 1
84. Messages of God's Blessings 2

Book - Rs.25/-

85. A Good Soldier of Jesus Christ
86. வேத ஒழுங்கின்படி தேவ ஊழியம் 3
87. வாக்குத்தத்தச் செய்திகள் 2005
88. வாக்குத்தத்தச் செய்திகள் 2006
89. தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
90. வாக்குத்தத்தச் செய்திகள் 2007
91. ஜெபத்தின் வல்லமை

Book - Rs.30/-

92. நல்ல போர்ச்சேவகன்
93. ஆவிக்குரிய தேவசெய்திகள்

வேண்டுவோர் விரும்பும் நூல்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி

24hrs Prayer line: 26625815

Herald of Deliverance

Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acaprayerhouse.org

Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007.
Phone: 26622021 e-mail: acalm@acaprayerhouse.org

Printed by :Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell 9841429079